| | | |
|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **16/03/2024** | முதல் | **20/03/2024** |
| அறிக்கை எண் : | **022/ 2024** | வெளியீட்டு நாள் : | **15/03/2024** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (10.03.2024 முதல் 14.03.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 20-03-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10/03 | 11/03 | 12/03 | 13/03 | 14/03 | தேதி | நாள்-1 16/03 | நாள்-2 17/03 | நாள்-3 18/03 | நாள்-4 19/03 | நாள்-5 20/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 37 | 37 | 37 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 39 | 38 | 38 | 39 |
| 26 | 25 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 25 | 25 | 26 | 26 |
| 5 | 3 | 2 | 2 | 1 | மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 81 | 75 | 74 | 80 | 57 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 60 | 60 | 60 | 60 |
| 39 | 45 | 32 | 30 | 28 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 5 | 8 | 4 | 6 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| வட கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 8 கி.மீ வேகத்தில், கிழக்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**கால்நடை வளர்ப்பு :**

தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு 16.03.2024 (முதல் 18.03.2024) உயர்ந்தபட்ச வெப்பநிலையானது இயல்பை விட 1 முதல் 2 டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்படும்.

வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்க தினமும் போதுமான அளவில் தாதுக்கலவையினை கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும்.

குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை கொடுப்பது மிகவும் அவசியமாகும். ஈரமான சணல் சாக்குககளை மாட்டு கொட்டகைகளில் பக்கவாட்டில் கட்டி விடவும்.

கொடுக்கவும்.

**விவசாயம் :**

பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை கண்டிப்பாக அதிகாலை வேளை அல்லது அந்தி மாலை வேளைகளில் மட்டும் மேற்கொள்ள வேண்டும். விவசாயிகள் உங்கள் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, சம்பங்கி, கால்நடை.**

**தக்காளி:**

தக்காளிப் பயிரில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. வெள்ளை ஈக்களின் தாக்குதலால் இலையின் மேற்பரப்பில் வெளிர்பச்சை நிற புள்ளிகள் காணப்படும்.

இலைகள் மஞ்சளாக மாறும், இலைகள் அடிப்புறத்தில் சுருண்டு பிறகு காய்ந்து விழுந்துவிடும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 6 கிராம் என்ற விகிதத்தில் அசிட்டமிபிரைடு மற்றும் 10மில்லி ஒட்டும்பசை கலந்து தெளிக்கவும்

**சம்பங்கி:**

சம்பங்கி பயிரில் மொட்டு துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகைப் பூச்சிகள் மெதுவாக பூக்களைத் தாக்கும், புழுக்கள் மொட்டுகள் மற்றும் பூக்களை துளைத்து சென்று மொட்டுக்களில் உள்ளிருப்பவற்றை உண்ணும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் கார்டாப் ஹைட்ரோ குளோரைடு மற்றும் 3 கிராம் இமாமெக்டின் பென்சோயேட் உடன் 10 மில்லி ஒட்டுப்பசை சேர்த்து கலந்து தெளிக்கலாம்.

**கால்நடை:**

நிலவும் வெப்பமான சூழ்நிலையில் கால்நடை கொட்டகைகளை முறையாக பராமரிப்பது மிகவும் அவசியமாகும்.

கொட்டகைகளின் திசையமைப்பு நல்ல காற்று வசதி கிடைக்கும் படியாக இருக்க வேண்டும்.

சூரிய வெப்பம் கால்நடைகளை நேரடியாகத் தாக்காதவாறு அமைக்க வேண்டும்.

கொட்டகைகளின் பக்கவாட்டில் கோனி சாக்குகளை தண்ணீரில் நனைத்து கட்டி வைக்க வேண்டும்.

.